[திரு. துரைமுருகன்] [2023 அக்டோபர் 11

புகழ்கிறது. அந்தப் புகழ் பெற்றவருக்கு இன்றைக்கு அழியாத ஒரு சின்னமாக வேளாண்மைக் கல்லூரிக்கு அவரது பெயரைச் சூட்டியிருக்கிறார். ஆகவே, இப்படிப்பட்ட பணியைச் செய்திருக்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நம்முடைய பாராட்டைத் தெரிவித்து அமைகின்றேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

4. தகவல் கோரல்

(அ) திருச்சி மாவட்டம், முக்கொம்பு, சுற்றுலா சென்ற சிறுமிக்கு பாலியல் தொல்லை செய்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் இன்று காலையில் நேரமில்லா நேரத்தில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முக்கொம்பு பிரச்சினை குறித்து பேசவிருக்கின்றார்கள் என்றார்கள்; வரவேற்கிறேன். அதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு முழு உரிமையுண்டு. அதை எழுத்துப்பூர்வமாகத் தந்தால் துறைகளுக்கு அனுப்பி, உடனடியாக அதற்குரிய பதில்களைப் பெறுவதற்கு அல்லது அதற்குரிய விளக்கம் பெற வசதியாக இருக்கும். வருங்காலங்களில் அதுபோன்ற நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். இதேபொருள் குறித்து நம்முடைய காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்களும் விதி 55-ன்கீழ் அறிவிப்பு தந்திருக்கின்றார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், முக்கொம்பு சுற்றுலாத்தலத்திற்கு 4–10–2023 அன்று, சுற்றுலா சென்ற துவாக்குடியைச் சேர்ந்த அன்சாரி மற்றும் அவருடன் சென்ற பெண்ணை அங்கு வந்த திருச்சி காவல் கண்காணிப்பாளருடைய தனிப்படை காவலர்கள் 4 பேர் மிரட்டி, காரில் அழைத்துச் சென்று, அந்தப் பெண்ணுக்கு பாலியல் தொல்லை தந்திருக்கிறார்கள். இதுதொடர்பாக அன்சாரியும், அந்தப் பெண்ணும் முக்கொம்பிலுள்ள புறக்காவல் நிலையத்திற்குச் சென்று, சம்பவம் குறித்து புகார் தெரிவித்திருக்கின்றனர். மேல்நடவடிக்கை எதுவும் எடுக்காத காரணத்தினால், திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் தெரிவிக்கப்பட்டு,

தவறிழைத்த 4 காவலர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. தமிழகத்தில் வேலியே பயிரை மேய்ந்த கதையாக காவல் துறையைச் சேர்ந்தவர்களே இதுபோன்ற பாலியல் குற்றச் சம்பவங்களில் ஈடுபட்ட நிகழ்வு காவல் துறையின் கட்டுப்பாட்டினைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. தவறிழைத்த காவலர்கள்மீது கடுமையான, சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட சம்பவங்கள் பொதுமக்களிடம் மிகுந்த அச்சத்தையும், பயத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இன்றைக்கு தமிழகத்திலே குறிப்பாக பெண்களுக்கு உரிய பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை நிலவுவதாக தெரிவிக்கப்படுகிறது. இதுபோன்ற சம்பவங்கள் இனி தமிழகத்தில் நடைபெறாமல் தடுக்க அரசு தனிக் கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி முக்கொம்பு பகுதியிலே காதலர்கள் சென்றிருந்தபோது, தனிப்படை காவலர்கள் 4 பேர் அந்தச் சிறுமியை மட்டும் அழைத்துச் சென்று பலாத்காரம் செய்தார்கள் என்று கேள்விப்பட்டு, உடனே அங்கிருக்கின்ற மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. வருண்குமார் அவர்கள் நடவடிக்கை எடுத்து, அந்த 4 பேர்மீதும் வழக்கு தொடர்ந்து POCSO சட்டத்தில் கைது செய்திருக்கிறார்கள். இதுபோன்று தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். கடந்த காலத்தில்கூட, **

பிற்பகல் 12–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களிடமும் எல்லா விவரங்களும் இருக்கின்றன. நாங்களும் விளக்கமாகப் பேசலாம். (குறுக்கீடுகள்) அதற்குள்ளாக சென்று பேசக்கூடாது என்பதற்காக, நடந்த சம்பவத்தை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [*2023 அக்டோபர் 11*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக நான் சுருக்கமாகத் தெரிவித்தேன். (குறுக்கீடுகள்) ஆனால், மாண்புமிகு உறுப்பினர், திட்டமிட்டு இதை திசை திருப்புகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்வார்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முக்கொம்பு பற்றி மட்டும் பேசி அமருங்கள். (குறுக்கீடுகள்) அதாவது, காவல் துறையில் இதுபோன்ற தவறுகள் நடந்துள்ளன என்றுதான் சொன்னார். அதில் ஒன்றும் தவறு இல்லை. நீங்கள் முக்கொம்பு* subject–ஐ *பேசி முடியுங்கள். (குறுக்கீடு)*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொன்னேன் என்றால், இதற்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இனிவரும் காலங்களில் நடக்கக்கூடாது. ** இதற்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றுதான் சொல்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடுகள்) பேசவே கூடாது என்றால் எப்படி? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, நான் சொல்வதைக் கேளுங்கள். முக்கொம்பு பிரச்சினையை* zero hour–*ல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்) முக்கொம்பு பற்றி மட்டும் பேசுங்கள். (குறுக்கீடுகள்) தகவல் கோரலாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆய்வுக்கு எடுத்திருக்கிறார். ஆகவே, முக்கொம்பு பற்றி மட்டும்தான் பேசவேண்டுமே தவிர, வேறு பொருள் குறித்துப் பேசுவது தவறு. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முக்கொம்பு பற்றி மட்டும் பேசுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை மட்டும் அனுமதியுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, நீங்களும் உட்காருங்கள். நான் சொல்கிறேன். தயவுசெய்து, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

2023 அக்டோபர் 11] [பேரவைத் தலைவர்]

நான் கேட்டுக்கொள்கிறேன். ஓர் உறுப்பினர் பேசுவதில் மாறுபட்ட கருத்தோ அல்லது அந்தப் பதிவை நீக்கவேண்டும் என்றாலோ அல்லது அதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றாலோ அல்லது இது தேவையில்லை என்று கருதினாலோ, எதிர்க்கட்சித் தலைவர் எழுந்துநின்று கோரலாம் அல்லது கொறடா எழுந்துநின்று கோரலாம். உடனே, நான் என்னவென்று கேட்கப் போகிறேன். யாராவது ஒருவர் எழுந்து பேச வேண்டுமே தவிர, ஒட்டுமொத்தமாக சபையில் எழுந்து நிற்க வேண்டுமா என்பதுதான் கேள்வி. (குறுக்கீடுகள்) நான் முடித்து விடுகிறேன். என்னைச் சொல்ல விடுங்கள். ஆகவே, இனி வருங்காலங்களில், யாராவது நீங்கள் எழும்பியபின்னர், உங்களுக்குப் பேச அனுமதி மறுக்கப்பட்டால், உங்கள் கட்சியைச் சேர்ந்த அனைவரும் எப்படி எங்கள் எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுமதி மறுக்கலாம் என்று கேட்கலாம். அதில் ஒரு நியாயம் உள்ளது. (குறுக்கீடுகள்) அது இல்லாமல், நீங்கள் ஒட்டுமொத்தமாக chorus ஆக எழுந்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படி இந்தச் சபை நடைபெறவில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேச எழுந்த உடனேயே. . . (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, அவை முன்னவர் சொன்னதுபோல பேசி முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறையும் வேண்டுமென்றே திட்டமிட்டு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் தொடர்ந்து இப்படி பேசி வருகிறார். இது தேவையற்றது. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேவையற்றது என்று. . . (குறுக்கீடு) அவை முன்னவரே சொல்லிவிட்டார். (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, zero hour-ல் எழுப்பியுள்ள பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினை. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். உங்களுடைய அனுமதியைப் பெற்று, இங்கே நான் பேசுகிறேன். அதுகுறித்துப் பேசினால் பரவாயில்லை. இல்லாவிட்டால், எங்களையும் பேசவிடுங்கள். நாங்களும் நிறைய விவரங்கள் வைத்திருக்கிறோம். என்னென்னவெல்லாம் நடந்தன என்பது குறித்து எங்களிடமும்

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2023 அக்டோபர் 11
குறிப்புகள் உள்ளன. எல்லாமே இருக்கிறது. நடைபெற்ற சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில்தான் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம். ஆனால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை முன்னவரும் இதுகுறித்து சொல்லிவிட்டார்கள். நானும் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) முக்கொம்பு மட்டும்தான் அவைப் பதிவில் இருக்கும். உட்காருங்கள். (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் தொடர்ந்து இதுபோன்றுதான் கருத்து சொல்லிவருகிறார். நீங்கள் பழைய பதிவுகளை எடுத்துப் பாருங்கள். ஒவ்வொரு முறையும் அப்பொழுது நடைபெற்ற சம்பவத்தை விட்டுவிடுகிறார். இதற்குமுன், 10 ஆண்டுகளுக்கு முன்பாக நடைபெற்றிருக்கலாம். அதற்குமுன், காங்கிரஸ் ஆட்சியில் நடைபெற்ற சம்பவமும் எங்களிடம் உள்ளது. அதையும் நான் சொல்ல முடியும். என்னென்னவெல்லாம் நடந்து கொண்டிருந்தன என்று நான் சொல்ல முடியும். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நீங்கள் அப்படிச் சொன்னதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, நீங்கள் அவை முன்னவர் சொன்னபடி பேசி முடியுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்றால், இனிவரும் காலங்களில் இப்படிப்பட்ட சம்பவம் நடக்கக் கூடாது. **இதெல்லாம் நடந்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நாங்கள் இதைப் பதிவு செய்கிறோம். இது தவறு என்றால், பிறகு என்னதான் பேசுவது? என்ன பேசுவது என்று எனக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

2023 அக்டோபர் 11]

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன பேசுவது என்று இல்லை; முக்கொம்பில் இவ்வாறு நடைபெற்றிருக்கிறது என்று குறிப்பிட்டு அதைப்பற்றித்தான் பேசவேண்டுமே தவிர, மற்ற பொருள் பற்றி நீங்கள் எடுத்துப் பேசினால் அதற்குப் பதில் கருத்து வரும். அதனால் அருள்கூர்ந்து, தயவுசெய்து, தற்போது எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள தகவல் கோரல் குறித்து மட்டும் பேசுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, பதிலுரையின்போது முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். நீங்கள் ஒரே வார்த்தைதான் கேட்கவேண்டும்.* Zero hour-*ல் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு அமரவேண்டும். அவ்வளவுதான்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிவரும் காலங்களில், நாங்கள் என்ன பேச வேண்டுமென்று எதிர்க்கட்சியை எழுதிக் கொடுக்கச் சொல்லுங்கள். நாங்கள் அப்படியே பேசுகிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்களும் எதிர்க்கட்சிதான். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 12–15

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4–10–2023 அன்று மாலை சுமார் 4–00 மணியளவில், திருச்சி மாவட்டம், ஜீயபுரம் காவல் நிலைய சரகம், முக்கொம்பு சுற்றுலா தலத்திற்கு ஜீயபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சசிகுமார், நவல்பட்டு காவல் நிலைய காவலர் பிரசாத், திருவெறும்பூர் பகுதி நெடுஞ்சாலை ரோந்து பணியில் பணிபுரிந்து வரும் சங்கர் ராஜபாண்டியன் ஆகியோர் அனுமதியோ, விடுப்போ பெறாமலும், உயரதிகாரிகளுக்கு எந்தவிதத் தகவலும் தெரிவிக்காமலும் ஜீயபுரம் போக்குவரத்துக் காவல் நிலையத்தில் பணிபுரிந்து, பல நாட்களாக பணிக்கு வராமல் இருந்த காவலர் சித்தார்த்தன் என்பவருடன் இணைந்து சென்று, சுற்றுலாத் தலத்திற்கு வருகை தந்திருந்த இளைஞர் மற்றும் 17 வயது பெண்ணை மிரட்டி, அந்த இளைஞரைத் தாக்கி, விரட்டி*

[திரு. மு.க. ஸ்டாலின்] [*2023 அக்டோபர் 11*

அனுப்பிவிட்டு, உடனிருந்த பெண்ணை அந்தக் காவலர்கள் தாங்கள் வந்திருந்த தனியார் காரிலே ஏற்றி, அவரிடம் தவறான முறையில் நடந்திருக்கிறார்கள்.

பின்னர், அந்தப் பெண் சத்தம் போட்டதால், அவரைக் காரிலிருந்து இறக்கிவிட்டிருக்கிறார்கள். இதனையடுத்து, அந்தப் பெண் மற்றும் அவருடன் வந்த இளைஞர் இருவரும் முக்கொம்பு புறக்காவல் நிலையத்திற்குச் சென்று புகார் அளித்ததன் பேரில், அங்கு பணியிலிருந்த காவல் துறையினர் உடனடியாக அவ்விடத்திற்குச் சென்று அந்தக் காவலர்களை விசாரித்தபோது, அவர்கள் முறையாகப் பதிலளிக்கவில்லை.

இங்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, காவல் நிலையத்தில் புகார் தெரிவித்து நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார். அது உண்மையல்ல. அந்தக் காவல் நிலையத்தில் புகார் அளித்த உடன், அந்தக் காவல் நிலைய S.I. உடனடியாக S.P.-யுடன் தொடர்பு கொண்டு, அவருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை.

உடனடியாக மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அளவில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, சம்பந்தப்பட்ட உதவி ஆய்வாளர் மற்றும் மூன்று காவலர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். மேலும், அந்தப் பெண் அளித்த புகாரின் பேரில் ஜீயபுரம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, உதவி ஆய்வாளர் மற்றும் மூன்று காவலர்கள் அன்றே கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும், குற்றம் இழைத்த காவலர்கள்மீது கடுமையான தண்டனை வழங்கக்கூடிய பிரிவுகளின்கீழ், துறை ரீதியான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. விரைவில் இதில் விசாரணை முடிக்கப்பட்டு, இறுதி உத்தரவு பிறப்பிக்கப்படும்.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில், குறிப்பாக பாலியல் வன்முறையில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும், அவர்கள்மீது பாரபட்சமின்றி, இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)